www.freetnbooks.com

TVL10SS

1926

திருநெல்வேலி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

## வகுப்பு 10

காலம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 14×1=14**

1) இத்தாலி யாருடன் லேட்ரன் உடன்படிக்கை செய்து கொண்டது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

2) 'ராஸ்ட் கோப்தார்' யாருடைய முழக்கம்?
அ) பார்சி இயக்கம் ஆ) அலிகார் இயக்கம்
இ) இராமகிருஷ்ணா ஈ) திராவிட மகாஜன சபை

3) கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?
அ) மருது சகோதரர்கள் ஆ) புலித்தேவர்
இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

4) **கூற்று** : பிரிட்டிஷ் அரசு 1857ம் ஆண்டின் பெரும்புரட்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.
**காரணம்** : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.
ஆ) கூற்று தவறு காரணம் சரி.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

5) இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது அமர்வு / மாநாடு எங்கே நடைபெற்றது?
அ) மெரினா ஆ) மைலாப்பூர் இ) புனித ஜார்ஜ் கோட்டை ஈ) ஆயிரம் விளக்கு

6) பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்

7) உலகிலேயே மிக நீளமான அணை ............
அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை

8) தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்
அ) சென்னை ஆ) சேலம் இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்

9) கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?
அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை இ) போர்காட் ஈ) அச்சன்கோவில்

10) மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.
அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கு எதிரான உரிமை
இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

11) நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது?
அ) உலக ஒத்துழைப்பு ஆ) உலக அமைதி
இ) இனச் சமத்துவம் ஈ) காலனித்துவம்

12) இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினரா்க இல்லை?
அ) ஜி 20 ஆ) ஏசியான் இ) சார்க் ஈ) பிரிக்ஸ்

13) பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018-19ல் ............ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
அ) 19.06 ஆ) 92.26 இ) 80.07 ஈ) 98.29

14) நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச்சட்டம் 480ஐ கொண்டு வந்த நாடு ............
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) சிங்கப்பூர் ஈ) இங்கிலாந்து

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி: 10×2=20**
**(வினா எண் 28 கட்டாய வினா)**

15) முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?
16) முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?
17) களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?
18) சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?
19) பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



20) காலநிலையைப் பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
21) மாங்கனீசின் பயன்களைக் குறிப்பிடுக.
22) தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.
23) தமிழ்நாட்டின் வேளாண் பருவ காலங்களை எழுதுக.
24) உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
25) சாபஹார் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
26) தனிநபர் வருமானம் என்றால் என்ன?
27) வரி வரையறுக்க.
28) குறைந்தபட்ச ஆதரவு விலை என்றால் என்ன?

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விரிவாக விடையளி: 10×5=50**
**(வினா எண் 42 கட்டாய வினா)**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
   i) நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ............ ஆவார்.
   ii) காந்தியடிகளின் அரசியல் குரு ............ ஆவார்.
   iii) கிழக்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ள உயரமான சிகரம் ............ ஆகும்.
   iv) சட்டமன்ற உறுப்பினர்கள் ............ ஆல் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   v) ............ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

30) 19ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
31) 1857ம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.
32) காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.
33) அ) **வேறுபடுத்துக:**
   i) வானிலை மற்றும் காலநிலை
   ii) வண்டல் மண் மற்றும் கரிசல் மண்

   ஆ) **காரணம் கூறுக:** இமயமலைகள் 'மடிப்பு மலைகள்' என அழைக்கப்படுகின்றன.
34) தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
35) பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்குத் திட்டங்கள் பற்றி எழுதுக.
36) காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.
37) இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38) அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக
39) நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
40) உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
41) 1920 முதல் 1940 வரையிலான ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
   (i) தில்லி (ii) குவாலியர் (iii) ஜான்சி (iv) தண்டி (v) பாரக்பூர்

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்: 2×8=16**

43) அ) முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.

**(அல்லது)**

   ஆ) இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவத்தையும் எழுதுக.

44) அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்:**
   (i) பாக்நீர்சந்தி (ii) கங்கை
   (iii) மேற்கு தொடர்ச்சி மலை (iv) வண்டல் மண்
   (v) காரகோரம் (vi) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை
   (vii) நெல் (viii) மலைக்காடு

**(அல்லது)**

   ஆ) **கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்:**
   (i) மன்னார் வளைகுடா (ii) சேலம்
   (iii) நீலகிரி (iv) காவிரி
   (v) வங்காள விரிகுடா (vi) சென்னை
   (vii) பறவைகள் சரணாலயம் ஒன்று (viii) நெல் விளையும் பகுதி ஒன்று

www.freetnbooks.com | FREETNBOOKS